# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:91** **தேதி:-17.01.2016**

## மத்திய சங்க செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

ரிலையன்ஸ் ஜியோவுடனான ஒப்பந்தம் :- ரிலையன்ஸ் ஜியோவுடனான ஒப்பந்தம் தொடர்பாக CMD BSNLக்கு BSNL ஊழியர் சங்கம் ஒரு கடிதம் எழுதியுள்ளது. BSNLல் உள்ள அனைத்து சங்கங்களும் BSNLன் புத்தாக்கத்திற்காக கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.இது போன்ற நிலைமை உள்ள போது தகிடுதத்தங்களுக்கு பெயர் போன நிறுவனமான ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்தோடு உடன்பாடு போடும் முன்னர் FORUMத்தோடு நிர்வாகம் விவாதித்திருக்க வேண்டும். அரசாங்கத்தின் நிர்பந்தத்தின் காரணமாகவே நிர்வாகம் இந்த ஒப்பந்தத்தில் இறங்கியிருக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் நம்புவதற்கு பல காரணங்கள் உண்டு. எனவே, ரிலையன்ஸ் ஜியோவுடனான ஒப்பந்தத்தின் அனைத்து அம்சங்கள் குறித்தும் சங்கத்துடன் விவாதிக்க வேண்டும் என கோரி BSNL ஊழியர் சங்கம் நிர்வாகத்திற்கு ஒரு கடிதம் கொடுத்துள்ளது.

**DIRECTOR(HR)** உடன் சந்திப்பு:- நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களும், துணைத் தலைவர் தோழர் P.அசோகா பாபு அவர்களும் DIRECTOR(HR) திருமிகு சுஜாதா ரே அவர்களை 12.02.2016 அன்று சந்தித்து கீழ்கண்ட விஷயங்களை விவாதித்து உள்ளனர்.

**JTO LICE** தேர்வு முடிவுகளை மறு பரிசீலனை செய்வது:- 02.06.2013அன்று நடைபெற்ற தேர்வு முடிவுகளை மறு பரிசீலனை செய்ய ஆந்திரபிரதேச மாநிலத்தில் அமைக்கப்பட்ட EXPERT COMMITTEE பரிந்துரைகளை ஹைதராபாத் CAT உறுதிப்படுத்தியுள்ளது என சங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த தீர்ப்பிற்கு மேல்முறையீடு செய்யாமல் நிர்வாகம் இதனை அமுல்டுத்த வேண்டும் என நமது தலைவர்கள் கேட்டுக் கொண்டனர். மேலும், தவறான கேள்விகளுக்கு எந்தெந்த மாநிலங்களில் கூடுதல் மதிப்பெண் கொடுக்கப்படவில்லையோ, அங்கெல்லாம் முழு கூடுதல் மதிப்பெண்கள் வழங்கி தேர்வு முடிவுகள் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**01.01.2007**க்கு பின் பணியமர்த்தப்பட்ட விடுபட்ட ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு :- 01.01.2007க்கு பின் பணியமர்த்தப்பட்டு ஊதிய இழப்பை சந்தித்து வருகின்ற விடுபட்ட ஊழியர்களுக்கு கூடுதலாக ஒரு ஆண்டு ஊதிய உயர்வு தொகை வழங்க வேண்டும் என்கின்ற கோரிக்கையினை பரிசீலிக்க அமைக்கப்பட்ட கமிட்டி அவர்களுக்கும் ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு தொகை வழங்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளது. எனவே பாதிக்கப்பட்ட தோழர்கள் மேலும் காலதாமதமின்றி நிவாரணம் பெற நிர்வாகக் குழு மற்றும் BSNL BOARDகளின் ஒப்புதலை விரைவாக பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தலைவர்கள் கேட்டுக் கொண்டனர்.

**நேரடி நியமன ஊழியர்களின் ஓய்வூதிய பலன்கள்:-** நேரடி நியமன ஊழியர்களுக்கு ஊதியத்தில் 6% ஓய்வூதிய பலன்களாக வழங்க நிர்வாகம் எடுத்துள்ள முடிவு EF செக்சனில் தேங்கியிருப்பதாக தெரிய வருகிறது. இந்த பிரச்சனையை விரைவுபடுத்தி நிர்வாகக் குழு மற்றும் BSNL BOARDகளின் ஒப்புதலை பெறுவதற்கான நடவடிக்களை மேற்கொள்ள வேண்டும் என DIRECTOR(HR) அவர்களை நமது சங்கம் கேட்டுக் கொண்டது.

***SC/ST*** **இட ஒதுக்கீடு** :- SC/ST ஊழியர்களுக்கான இட ஒதுக்கீட்டில் DOP&T உத்தரவுகள் அமுலாக்கப்படாத பிரச்சனையை மீண்டும் DIRECTOR(HR) அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இதற்காக அமைக்கப்பட்ட கமிட்டி வரையறுக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் தனது அறிக்கையினை சமர்பிக்காதது தொடர்பாக நமது தலைவர்கள் புகார் கூறினர். இந்த பிரச்சனையில் DIRECTOR(HR) உடனடியாக தலையிட்டு DOP&T உத்தரவுகள் விரைவில் அமுலாக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

மேற்கண்ட அனைத்து பிரச்சனைகளிலும் தலையிட்டு கவனித்து தேவையானவற்றை மேற்கொள்வதாக DIRECTOR(HR) உறுதி அளித்துள்ளார்.

***அட்ஹாக் PLI*** :- BSNLன் வருமானத்தையும், சந்தாதாரர்களின் எண்ணிக்கையையும் உயர்த்துவதற்காக ஊழியர்கள் கடுமையான முயற்சிகளை எடுத்து வருவதை கணக்கில் கொண்டு BSNL ஊழியர்களுக்கு அட்ஹாக் PLIஐ வழங்க வேண்டுமென வலியுறுத்தி BSNL CMDக்கு BSNL ஊழியர் சங்கம் கடிதம் எழுதியுள்ளது. ஊழியர்கள் எடுத்து வரும் முயற்சிகள் பெரும் பலனை தந்துள்ளது. அதன் காரணமாக வருமானமும் சந்தாதாரர்களின் எண்ணிகையும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. இந்த சமயத்தில் ஊழியர்களுக்கு அட்ஹாக் PLI தருவது BSNLன் புத்தாக்கத்திற்கான ஊழியர்களின் மனநிலையை மேலும் உயர்த்தும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

***CMD யுடன்சந்திப்பு:-*** 11.01.2016 அன்று BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களும், தலைவர் தோழர் பல்பீர்சிங் அவர்களும் BSNL CMD திருஅனுபம் ஸ்ரீவஸ்தவா அவர்களை சந்தித்து கீழ் கண்ட விஷயங்களை விவாதித்துள்ளனர்.

**கேடர்களின் பெயர் மாற்றம் மற்றும் E-1 ஊதியவிகிதம்**:-நிர்வாகக் குழுவால் ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள கேடர்களின் பெயர் மாற்றம் மற்றும் E-1 ஊதிய விகிதம் ஆகியவற்றை வருகின்ற இயக்குனர் குழுக் கூட்டத்தில் ஒப்புதலை பெற வேண்டும் என BSNL CMD அவர்களை தலைவர்கள் கேட்டுக் கொண்டனர்.

**நேரடி நியமன ஊழியர்களுக்கான ஓய்வூதிய பங்கீடு**:- நேரடி நியமன ஊழியர்களுக்கு BSNL நிர்வாகம் வழங்க வேண்டிய ஓய்வூதிய பங்கீடு பிரச்சனை அசாதாரண தாமதத்திற்கு உள்ளாக்கப் பட்டுள்ளது என்பதை தலைவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். BSNLன் ஓய்வூதிய பங்கீடு இறுதி செய்யப் படாததால் இந்த ஊழியர்களுக்கான ஓய்வூதிய திட்டம் இன்னமும் இறுதி செய்யப் படவில்லை. இதன் காரணமாக ஓய்வு பெறும் தோழர்களுக்கும், இறந்து போகும் தோழர்களின் குடும்பத்தாருக்கும் பெருத்த இழப்பு ஏற்பட்டு வருகிறது என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

இந்த பிரச்சனைகளை அக்கறையுடன் கவனிப்பதாக CMD உறுதி அளித்துள்ளார்.

***FORUM முடிவுகள்:-***அகில இந்திய FORUMத்தின் கூட்டம் 11.01.2016 அன்று டெல்லியில் தலைவர் தோழர் சந்தேஸ்வர் சிங் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அனைத்து முக்கியமான சங்கங்களின் தலைவர்களும் கலந்துக் கொண்ட அந்தக் கூட்டத்தில் 'புன்னகையுடன் கூடிய சேவை' திட்டத்தை வெற்றிகரமாக அமுலாக்க தல மட்ட அமைப்புகளுக்கு மேலும் சில வழிகாட்டுதல்களை கொடுக்க வேண்டும் என அமைப்பாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் வலியுறுத்தினார். நீண்ட விவாதங்களுக்கு பின் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன:-

01) சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும், வியாபார நடவடிக்கைகளை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கும் தேவையான வழிகாட்டுதல்களை அகில இந்திய FORUM ஏற்கனவே கொடுத்துள்ளது. இந்த திட்டத்தின் அமுலாக்கம் தொடர்பாக மாவட்ட மாநில FORUMகள் மாதம் இருமுறை பரிசீலிக்க வேண்டும்.
02) அனைத்து CSCகள் மற்றும் BSNL அலுவலகங்கள் முன்பும் புன்னகையுடன் கூடிய சேவை திட்டம் பற்றியும், BSNL வழங்கும் அனைத்து சேவைகள் தொடர்பாக்வும் விரிவான FLEX பேனர்கள் வைக்க வேண்டும்.
03) அகில இந்திய FORUM ஏற்கனவே கொடுத்துள்ள வழிகாட்டுதல்கள் அடிப்படையில், மாவட்ட மாநில FORUMகள் ஒவ்வொரு ஊழியர்களையும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்குவிக்க வேண்டும். அவர்களுக்கு கோட்டா நிர்ணயம் செய்ய வேண்டும்.
04) அதிக இணைப்புகளை கொண்டு வருவதற்காக பொது மக்கள் மத்தியில் சுற்றறிக்கை வினியோகிக்க வேண்டும்.
05) தற்போதுள்ள சந்தாதாரர்களை GPRS மூலம் BSNLன் VALUE ADDED SERVICEகளை பயன்படுத்துவதற்காக பயிற்றுவிக்க வேண்டும்.
06) அகில இந்திய சங்கங்களுக்கு மாதாந்திர அறிக்கையினை அனுப்ப வேண்டும்.

***ஊதிய தேக்க நிலை*** :- 11.01.2016 அன்று ஊதிய தேக்க நிலை தொடர்பாக JAC மற்றும் BSNL நிர்வாகத்திற்கிடையே பேச்சு வார்த்தை நடைபெற்றது. நமது சங்கத்தின் சார்பில் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் துணைத் தலைவர் தோழர் அசோகா பாபு ஆகியோர் கலந்துக் கொண்டனர். நிர்வாகத்தின் சார்பில் திருமிகு மது அரோரா GM (ESTT), மற்றும் திரு சிவசங்கர் பிரசாத் DGM(Estt) ஆகியோர் கலந்துக் கொண்டனர். RM மற்றும் Gr.D கேடர்களில் உள்ள ஊழியர்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள இந்த ஊதிய தேக்க நிலை பிரச்சனையை தீர்வு காண ஏதாவது வழிமுறைகளை கண்டு பிடிக்க வேண்டுமென தொழிற்சங்க பிரதிநிதிகள் நிர்வாகத்தை வலியுறுத்தினர். நீண்ட விவாதங்களுக்கு பின் கீழ்கண்ட முடிவுகள் எட்டப்பட்டன:-

1) இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை என்பதற்கு பதிலாக வருடம் ஒரு முறை தேக்க நிலை ஊதியம் வழங்க வேண்டும். இந்த பிரச்சனைக்கு DOTயின் ஒப்புதலையும் பெற வேண்டும். நிர்வாக தரப்பில் இது தொடர்பாக பரிசீலிக்க ஏற்றுக்கொண்டது.
2) ஊதிய தேக்க நிலை ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு அதே தேதியில் NEPP பதவி உயர்வு கிடைக்கும் பட்சத்தில் தேக்க நிலை ஊதியம் மறுக்கப்படுகிறது. ஏனெனில் NE2 ஊதியத்தில் தேக்க நிலை ஊதியம் பெரும் தோழர்களுக்கு அதுவே NE3 ஊதியத்தின் அதிகபட்ச ஊதியமாக உள்ளது. உதாரணத்துடன் சுட்டிக்காட்டப்பட்ட போது அதனை தீர்வு காண நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

***OFFICIATING JTOக்களுக்கு ஊதிய மாற்றம்:-*** 11.01.2016 அன்று திரு சிவசங்கர் பிரசாத் DGM(Estt) அவர்களை சந்தித்த BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர்

P.அபிமன்யு மற்றும் துணைத் தலைவர் தோழர் அசோகா பாபு ஆகியோர் சரியான முறையில் OFFICIATING JTOக்களுக்கு 01.01.2007 முதல் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். அந்த பிரச்சனையில் தலையிடுவதாக அவர் உறுதி அளித்துள்ளார்.

**பஞ்சப்படி உயர்வு:-** 01.01.2016 முதல் பஞ்சப்படி 112.4%ஆக உயர்ந்துள்ளதற்கான உத்தரவினை BSNL கார்ப்பரேட் அலுவலகம் 11.01.2016 அன்று வெளியிட்டுள்ளது.

**இலாகா தேர்வுகள்:-** JTO(E) பதவிக்கான LDCE தேர்வு 27.03.2016 அன்றும், UDC to Assistant Managerக்கான LICE தேர்வு 30.03.2016 அன்றும் நடைபெறுவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

**QUARTERS ALLOTMENT:-** ஒரு ஊழியருக்கு தகுதியான TYPEக்கும் ஒரு கட்டு உயர்ந்த TYPE குடியிருப்புகளை தற்போது ஒரு சில கட்டுப்பாட்டுகளுக்கு உட்பட்டு ஒதுக்கலாம் என விதிகள் உள்ளது. ஆனால் தற்போது ஊழியர்கள் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வரும் சூழலில் நிறைய குடியிருப்புகள் காலியாக உள்ளதால், அதற்கு மேற்பட்ட குடியிருப்புகள் காலியாக இருப்பின், அதனையும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினை BSNL ஊழியர் சங்கம் எழுப்பியுள்ளது.

**JTO(T) தேர்வு விதிகள் 2014ல் மாற்றம் தேவை:-** JTO(T) தேர்வு விதிகள் 2014ல் தற்போது உள்ள விதிகளின் படி NE-9 ஊதிய விகிதத்தில் 5ஆண்டு கால சேவை முடித்திருக்கும் ஊழியர்கள் மட்டுமே கல்வி தகுதி இருப்பினும் JTO(T) தேர்வுகளை எழுத முடியும். இது கல்வி தகுதியுடைய Sr.TOA கேடரில் உள்ள 20 வருடத்திற்கும் மேற்பட்ட சேவை உள்ள தோழர்களுக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. எனவே இதற்கு தகுந்த மாதிரி JTO(T) தேர்வு விதிகள் 2014ல் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்றும், அது திருத்தப்படும் வரை ஒரு கட்ட விலக்காக அனைத்து ஊழியர்களும் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும் என நமது மத்திய சங்கம் கார்ப்பரேட் அலுவலகத்திற்கு கடிதம் எழுதியுள்ளது.

**BSNL MRS பரிசீலனை செய்யும் குழுவின் கூட்டம்:-** BSNL MRS திட்டத்தை பரிசீலிப்பதற்காக அமைக்கப்பட்ட குழுவின் முதல் கூட்டம் 08.01.2016 அன்று நடைபெற்றது. BSNL உழியர் சங்கத்தின் சார்பாக நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்களும், NFTE சார்பாக அதன் பொது செயலாளர் தோழர் சந்தேஸ்வர் சிங் அவர்களும் கலந்துக் கொண்டனர். நிர்வாக தரப்பில் திரு S.K.சின்ஹா GM(Admn), திரு ராம் சாகால் Addl GM(SR) திரு S.H.ராவ் DGM(EF) மற்றும் திரு சௌலே DM ஆகியோர் பங்கேற்றனர். கீழ்கண்ட காரணங்களால் ஊழியர்கள் இந்த திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற பெரும் சங்கடங்களை சந்திக்கின்றனர் என நமது பொது செயலாளர் தெரிவித்தார்:-

அ) தற்போது சந்தையிலுள்ள விலைகளை விட CGHS கட்டணங்கள் குறைவாக இருப்பதால், எந்த ஒரு நல்ல மருத்துவமனையும் BSNLக்கு ஒப்புதல் தருவதில்லை. மேலும், பல சிகிச்சைகளுக்கு ஊழியர்கள் தங்களது சொந்த பணத்தில் இருந்து செலவு செய்ய வேண்டி உள்ளது.

ஆ) BSNL பொருளாதார நெருக்கடியில் உள்ளதால் மருத்துவமனை பில்கள் தீர்வு காண்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. அதனால் நல்ல மருத்துவ மனைகள் BSNLஉடன் உடன்பாடு போட விரும்புவதில்லை.

எனவே ஊழியர்கள் சந்திக்கும் சங்கடங்களை களைவதற்கு ஒரு வழி கண்டு பிடிக்க வேண்டும் என நமது பொது செயலாளர் ஆலோசனை கூறினார். நீண்ட நெடிய விவாதங்களுக்கு பின் கீழ்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன:-

1) BHEL, SBI, COAL INDIIA Ltd, உள்ளிட்ட இதர பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள மருத்துவ சிகிச்சை தொடர்பாக ஆழ்ந்து படித்து பார்க்க வேண்டும்.
2) BSNL நிறுவனம் MEDI CLAIM திட்டத்திற்கு மாறலாமா என ஆலோசிக்க வேண்டும்.
3) தேங்கியுள்ள மருத்துவ பில்களை உடனடியாக செட்டில் செய்ய கார்ப்பரேட் அலுவலகம் அனைத்து மாநில நிர்வாகங்களுக்கும் கடிதம் எழுதுவது.
4) பிப்ரவரி இறுதி வாரத்தில் அடுத்த கூட்டத்தை நடத்துவது

**02.06.2013ல் நடைபெற்ற JTO LICE தேர்வு முடிவுகள் மறு பரிசீலனை:-** 02.06.2013 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வு முடிவுகளை பரிசீலித்து கூடுதல் மதிப்பெண்கள் போடுவதற்காக அமைக்கப்பட்ட குழுக்கள், பல மாநிலங்களில் தவறான கேள்விகளுக்கு முழு மதிப்பெண்கள் கொடுக்காமல், குறைவாக கொடுக்கப்பட்டுள்ளது. எனவே 30ஆவது தேசிய கவுன்சில் கூட்டத்தில் ஏற்றுக் கொண்டபடி கூடுதல் மதிப்பெண்களை வழங்க வேண்டும் என நமது பொது செயலாளர் தோழர் அபிமன்யு அவர்களும் தலைவர் தோழர் பல்பீர்சிங் அவர்களும், DIRECTOR(HR) திருமதி சுஜாதா ரே அவர்களை 07.01.2016 அன்று கேட்டுக் கொண்டனர். அவரும் நமது சங்கத்தின் கருத்துக்களில் உடன்பட்டதோடு இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதி அளித்துள்ளார்.

டிசம்பர் மாதத்தில் சாதனை:- டிசம்பர், 2015ல் BSNL ஒரு புதிய சாதனை படைத்துள்ளது. BSNL நிறுவனம் டிசம்பர் மாதத்தில் 17.5 லட்சம் புதிய மொபைல் தொலைபேசி இணைப்புகளை வழங்கியுள்ளது. இது இதுவரை எட்டியிராத உயரம். மேலும் டிசம்பர் 2015க்கு என நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட 87.59% அதிகம். தமிழகம், பீகார், ஜார்கண்ட், கொல்கொத்தா, NE-1, ராஜஸ்தான், சென்னை மற்றும் மகாராஷ்ட்ரா ஆகிய மாநிலங்கள் இலக்கை தாண்டி இணைப்புகளை கொடுத்துள்ளன. அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**